# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.163 of 2025
Prosecution Witness No.P.W.1 (L.W.2)

| | |
|---|---|
| Name | **சரவணன்** |
| Father/Husband Name | **துரை** |
| Calling/Occupation | **கூலி** |
| Age | 49 |
| Address | **சங்கரன்பாளையம்.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் சங்கரன்பாளையத்தில் வசித்து வருகிறேன். இரும்பு கடையில் நான் வேலை செய்கிறேன். சசிரேகா என்பவரின் வீடு இரும்பு கடைக்கு பக்கத்தில் உள்ளது. ராஜ்குமார் டிரைவர் வேலை செய்கிறார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 07.00 மணிக்கு முன்பு நான் இரும்பு கடையில் இருந்தபோது திடீரென்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது. நானும், ராஜ்குமாரும் ஓடினோம். ஓடியபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டோம்.

அதனால் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எதற்காக சத்தம் போட்டார் என்று தெரியாது. வழக்கு பற்றி தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் 28.01.2022 அன்று மாலை சசிரேகாவின் அலறல் சத்தம் கேட்டு ரோட்டிற்கு வந்த பார்த்தபோது நம்பர் பிளேட் இல்லாத Honda Activa என்ற வாகனத்தை எதிரி எடுத்துக்கொண்டு வேகமாக வந்தபோது நாங்கள் தடுத்தோம் என்றும் அப்போது அவர் இருசக்கர வாகனத்தில் இருந்தபடியே கத்தியை காட்டி யாராவது பிடிக்க வந்தால் கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டி கத்தியை குறுக்கும் நெடுக்குமாக வீசியபோது எனக்கும் ராஜ்குமாருக்கும் காயம் ஏற்பட்டது என்றும் அந்த நபர் ஆஜர் எதிரி என்றும் அவர் தப்பிவிட்டார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:40:17 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.163 of 2025
Prosecution Witness No.P.W.2 (L.W.9)

| | |
|---|---|
| Name | **மருத்துவர் எழிலரசி** |
| Father/Husband Name | Naveen Kumar |
| Calling/Occupation | Doctor |
| Age | 45 |
| Address | Thiruvannamalai Medical College Hospital. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதியோர் மருத்துவ பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.01.2022 அன்று மாலை 07.30 மணி அளவில் அரசு வேலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது திரு.ராஜ்குமார், 27 வயதுள்ள ஆண் நபர் திரு. சரவணன் என்பவரால் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது அவரை தெரிந்த ஒரு ஆண் நபர்

கத்தியால் அன்று மாலை 06.45 மணி அளவில் சங்கரன்பாளையத்தில் தாக்கியதாக சொன்னவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு இடது முன் கையில் சிறிய சிராய்ப்பு காயம் 3 x 2 x 1 செ.மீ அளவில் இருந்தது. வேறு எந்த வெளிப்புற காயங்களும் காணப்படவில்லை. அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து அறுவை சிகிச்சை நிபுணரின் கருத்துரைக்காக பரிந்துரைக்கப்பட்டார். அவர் அவரிடம் செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை என்னால் கூற இயலவில்லை.

அன்றே அதே சம்பவத்தில் மாலை 07.35 மணி அளவில் காயம்பட்டதாக ராஜ்குமார் என்பவரால் அழைத்து வரப்பட்ட சரவணன் என்பவரும் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டவரை விசாரித்தபோது அதே தெரிந்த நபர் அதே இடத்தில் கத்தியால் தாக்கியதாக சொன்னவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு வலது முன் கையில் 2 X 2 x 1 செ.மீ வெட்டுக்காயமும் காணப்பட்டது. அதேபோன்று இடது முன் கையில் 2 X 1 X 1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அவரும் மேல் சிகிச்சைக்காக அறுவை சிகிச்சை நிபுணருக்கு பரிந்துரைக்கபட்டார். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்படாததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து கூற முடியவில்லை.

மேலும், இரவு 08.00 மணி அளவில் 108 ஆம்புலன்ஸ் மூலம் அசோக்குமார் என்பவரை அழைத்து வரப்பட்டவரை விசாரித்தபோது அவர் தன்னை தானே கத்தியால் மாலை சுமார் 06.45 மணி அளவில் சங்கரன்பாளையத்தில் தாக்கிக்கொண்டதாக சொன்னவரை பரிசோதித்தபோது அவருக்கு வெட்டுக்காயம் 5 X 2 X 2 செ.மீ அளவில் இடது மணிக்கட்டின் பின்புறம் இருந்தது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்க்கப்பட்டு, முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார்.

அதேநாளில் இரவு சுமார் 10.10 மணி அளவில் சசிரேகா என்பவரை காவலர் காளிதாஸ் என்பவரால் அழைத்துவரப்பட்டபோது அவரின் கணவர் ராமன் என்பவரும் உடன் இருந்தார். அவரை விசாரித்தபோது அன்று மாலை சுமார் 06.45 மணி அளவில் 107, அரணி ரோடு, சங்கரன்பாளையம் என்ற இடத்தில் தெரிந்த ஒரு ஆண் நபர் தன்னை கத்தியால் தாக்கி Chain Snatch செய்ததாக சொன்னவரை பரிசோதனை செய்தபோது அவருக்கு வலது முன் கையில் சிராப்பு காயம் 2 செ.மீ அளவிலும், 1 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் இடது முன் கையிலும் காணப்பட்டது. வேறு எந்த வெளிக்காயங்களும் அவருக்கு இல்லை. அவருக்கு முதல் உதவி அளித்து அறுவை சிகிச்சை நிபுணரின் கருத்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். அவர் அறுவை சிகிச்சை நிபுணரிடம் செல்லாததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை கூற இயலவில்லை.

மேற்கண்ட ராஜ்குமார் என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.2 ஆகும். சரவணன் என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.3 ஆகும். அசோக்குமார் (எதிரி) என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.4 ஆகும். சசிரேகா என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.5 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ராஜ்குமார் என்பவரின் விபத்து பதிவேட்டில் By one known man with knife என்று இடைச்செறுகலாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான். அது அப்போதே எழுதப்பட்டது. காயத்தின் நிறம், தன்மை மற்றும் வயது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயம் சிறிய காயம். அவர் இரும்பு வெல்டிங் கடையில் வேலை செய்யும்போது தொழில் சம்பந்தமாக பொருட்களை ஏற்றி இறக்கும்போது மேலே சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்பு உண்டு.

அதேபோன்று சரவணன் என்பவரின் விபத்து பதிவேட்டிலும் one known man with knife என்று இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் அதுவும் அப்போதே எழுதப்பட்டதுதான். இரண்டுமே பின்னிட்டு போலீசார் சொல்லிக்கொடுத்து அவ்வாறு எழுதினேன் என்றால் சரியல்ல. அந்த நபருக்கும் காயத்தின் நிறம், தன்மை மற்றும் வயது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயம் சிறிய காயம் என்றால் வெட்டுக்காயம்தான்.

அவர் இரும்பு கட்டில் கிரில் ஏற்றி இறக்கும்போது மேலே சொன்ன காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்பு உண்டு. அசோக்குமார் என்பவருக்கு மற்றவர் வெட்டினால் அந்த காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்புண்டு. அவருக்கு கருத்துரை வழங்கவில்லை என்றால் வழங்கவில்லை.

சசிரேகா என்பவருக்கு ஏற்பட்ட காயத்தின் நிறம், தன்மை மற்றும் வயது குறிப்பிடவில்லை என்றால் பொதுவாக குறிப்பிடுவதில்லை. அவருடைய விபத்து பதிவேட்டிலும் With knife என்று இடைசெறுகலாக சேர்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சேர்க்கப்படவில்லை. போலீசார் சொல்லிக்கொடுத்து இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4 சவரன் செயின் கழுத்தில் இருப்பதை அறுத்தால் கீறலோ அல்லது சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. அவருக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும் வீட்டில் சாதாரணமாக வேலை செய்யும்போது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உண்டு.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:40:32 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.163 of 2025
Prosecution Witness No.P.W.3 (L.W.3)

| | |
|---|---|
| Name | ராஜ்குமார் |
| Father/Husband Name | ஏழுமலை |
| Calling/Occupation | டிரைவர் |
| Age | 31 |
| Address | அடுக்கம்பாறை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் அடுக்கம்பாறையில் வசித்து வருகிறேன். நான் சங்கரன்பாளையத்தில் உள்ள இரும்பு கடையில் வேலை செய்கிறேன். சரவணனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. கடையில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது 2022ம் ஆண்டு ஒரு நாள் மாலை பக்கத்து வீட்டில் வசிக்கும் சசிரேகாவின் சத்தம் கேட்டு நானும் சரவணனும் ஓடியபோது கால் தடுமாறி கீழே விழுந்துவிட்டோம். அதனால் எங்கள் இருவருக்கும் அடிப்பட்டுவிட்டது.

வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. அடிப்பட்ட எங்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் 28.01.2022 அன்று மாலை சசிரேகாவின் அலறல் சத்தம் கேட்டு ரோட்டிற்கு வந்த பார்த்தபோது நம்பர் பிளேட் இல்லாத Honda Activa என்ற வாகனத்தை எதிரி எடுத்துக்கொண்டு வேகமாக வந்தபோது நாங்கள் தடுத்தோம் என்றும் அப்போது அவர் இருசக்கர வாகனத்தில் இருந்தபடியே கத்தியை காட்டி யாராவது பிடிக்க வந்தால் கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டி கத்தியை குறுக்கும் நெடுக்குமாக வீசியபோது எனக்கும் சரவணனுக்கும் காயம் ஏற்பட்டது என்றும் அந்த நபர் ஆஜர் எதிரி என்றும் அவர் தப்பிவிட்டார் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.04.28 17:40:39 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.163 of 2025
Prosecution Witness No.P.W.4 (L.W.6)

| | |
|---|---|
| Name | சேட்டு |
| Father/Husband Name | சீனிவாசன் |
| Calling/Occupation | டிரைவர் |
| Age | 29 |
| Address | சங்கரன்பாளையம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.04.2026.

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் சங்கரன்பாளையத்தில் வசிக்கிறேன். ஸ்ரீ கற்பக விநாயகா மோட்டார்ஸ் ஸ்டீல் டிரேடர்சில் டிரைவராக வேலை செய்கிறேன். சசிரேகா என்பவரை தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை கூட்டமாக இருந்ததால் நான் கடைக்கு வந்தேன். போலீசார் இருந்தார்கள். என் பெயரை கேட்டு முகவரி கேட்டு கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். கடையில் ஏதோ பிரச்சினை ஆகிவிட்டது என்று சொன்னார்கள்.

என்ன பிரச்சினை என்று தெரியாது. வேறு எதுவும் வழக்கு பற்றி தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அது அ.த.சா.ஆ.1** ஆகும்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

போலீசார் விசாரணையில் நான் 28.01.2022 அன்று மாலை சசிரேகாவின் அலறல் சத்தம் கேட்டு ரோட்டிற்கு வந்த பார்த்தபோது நம்பர் பிளேட் இல்லாத Honda Activa என்ற வாகனத்தை எதிரி எடுத்துக்கொண்டு வேகமாக வந்தபோது சரவணன் என்பவரும் நானும் தடுத்தோம் என்றும் அப்போது அவர் இருசக்கர வாகனத்தில் இருந்தபடியே கத்தியை காட்டி யாராவது பிடிக்க வந்தால் கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டி கத்தியை குறுக்கும் நெடுக்குமாக வீசியபோது ராஜ்குமாருக்கும், சரவணனுக்கும் காயம் ஏற்பட்டது என்றும் அந்த நபர் ஆஜர் எதிரி என்றும் அவர் தப்பிவிட்டார் என்றும் சம்பவம் நடந்த இடத்தை போலிசார் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்தார்கள் என்றும் அதில் நானும் சுகுமாரும் கையொப்பம் இட்டோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.04.28 17:40:46 +0530